தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்





மலர்:03 | இதழ்:290 | 4 பக்கங்கள் | 17:05:2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825



கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை
கள்வார்க்குத் தள்ளாது புத்தே ளுளகு.

**விளக்கம்:**
களவாடுபவர்க்கு உயிர் வாழ்வதேகூடத் தவறிப்போகும்; களவை நினைத்தும் பார்க்காதவர்க்கோ, புகழுலக வாழ்க்கை தவறவே தவறாது.

## வெளிநாட்டுப் பயணங்களுக்கு கூடுதல் வரி விதிப்பா? - பிரதமர் மோடி மறுப்பு





புது டெல்லி: மே-17

வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக வெளியான ஊடக செய்தி முற்றிலும் பொய்யானது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி, செஸ் அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், ஆனால் இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் ஊடக நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டது. இதற்கு மறுப்பு தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த செய்தி முற்றிலும் பொய்யானது. இதில் ஒரு துளிகூட உண்மை இல்லை. வெளிநாட்டுப் பயணங்களுக்கு இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் கேள்விக்கே இடமில்லை. நமது மக்கள் வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குவதையும், வாழ்வதை எளிதாக்குவதையும் மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். ஒரு ஊடகச் செய்தியை பிரதமரே மறுப்பது அரிதான நிகழ்வாகும்.தொடர்ந்து நடைபெற்று வரும் மேற்காசிய மோதலின் காரணமாக, பொருளாதாரத்தை வலுப்படுத்த எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் தங்கம் வாங்குவதை ஒத்திவைத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு விடுத்திருந்தார். இதனை தொடர்ந்து தங்கம் மீதான இறக்குமதி வரி சில நாட்களுக்கு முன்பு உயர்த்தப்பட்டது. மேலும், பெட்ரோல், டீசல் விலையும் லிட்டருக்கு ரூ.3 என வெள்ளிக்கிழமை அன்று உயர்த்தப்பட்டது.

## பிரதமரின் வேண்டுகோளை மீறி வாகன ஊர்வலம் பாஜக பிரமுகர் மீது ம.பி முதல்வர் நடவடிக்கை



புதுடெல்லி: மே-17

எரிசக்தி பயன்பாட்டை மிச்சப்படுத்த வேண்டுமென்ற பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை மீறி மத்தியப் பிரதேசத்தில் வாகன ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. இதன் மீதான நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட பாஜக பிரமுகருக்கு அம்மாநில முதல்வர் மோகன் யாதவ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.மேற்காசிய போரின் நெருக்கடி உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. இந்த நெருக்கடியின் மத்தியில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் உயர்ந்துள்ளன. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்ட பிரதமர் மோடி, தங்க நகைகள் வாங்குவதைத் தள்ளிப்போடுமாறும், பெட்ரோல் மற்றும் டீசலை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார்.இதை ஏற்று மத்திய அமைச்சர்கள் மற்றும் பாஜக ஆளும் மாநில அரசுகள் தங்கள் வாகன பயன்பாட்டை குறைப்பது மற்றும் அத்தியாவசியமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தையும் கடைப்பிடிக்கத் துவங்கி உள்ளனர். இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலத்தின் பாஜக பிரமுகர் சவுபாக்ய சிங் தாக்கூர், பிரதமர் மோடியின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு, உஜ்ஜயினிலிருந்து போபாலுக்கு நூற்றுக்கணக்கான வாகனங்கள் கொண்ட ஒரு ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றார்.இவரை ம.பி முதல்வர் மோகன் யாதவ், அம்மாநிலப் பாடநூல் கழகத்தின் தலைவராக அமர்த்தி இருந்தார். இந்த பொறுப்பை ஏற்பதற்காக சவுபாக்ய சிங் தாக்கூர் சென்று கொண்டிருந்தார். இந்த காட்சிப்பதிவுகள் உடனான செய்தி ஊடகங்களில் வெளியானது. இதையடுத்து, முதலமைச்சர் மோகன் யாதவ் உத்தரவின் பேரில், சவுபாக்யா சிங்கிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.இதில், தேசிய நலன் சார்ந்த வேண்டுகோளைப் புறக்கணித்ததற்காவும், அரசின் வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றாததற்காகவும் விளக்கம் கேட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சவுபாக்யா சிங்கிற்கு பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. ம.பி அரசின் பாடநூல் கழகத்தின் அலுவலகம் அல்லது வளாகத்திற்குள் சவுபாக்ய சிங் நுழைவதற்கு, மறு உத்தரவு வரும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.கழகத்திற்குச் சொந்தமான எந்தவொரு வசதியையும், வாகனத்தையும், ஊழியரையும் அல்லது அலுவலகத்தையும் அவர் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அவர், கழகம் தொடர்பான எந்தவொரு கூட்டத்திலும் பங்கேற்கவோ அல்லது தலைமை தாங்கவோ முடியாது. கழகத்தின் நிர்வாகம் அல்லது நிதி சார்ந்த முடிவுகள் எதிலும் பங்கேற்பதோ அல்லது கையெழுத்திடுவதோ, மறு உத்தரவு வரும் வரை தடை செய்யப்பட்டுள்ளது. உ.பி.யில் வாகன ஊர்வலம்: இதனிடையே, உத்தரப்பிரதேசத்தில் பிரதமர் மோடியின் தொகுதியான வாராணாசியிலும் இதேபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. இங்கு மாவட்ட பாஜக தலைவர் ஹன்ஸ்ராஜ் விஷ்வ கர்மா, உ.பி அமைச்சரவையில் புதிய உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.இவரை வாராணாசியில் அவரது கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் 80 வாகனங்களுடன் வரவேற்றுள்ளனர். இதில், ஆக்கிரமிப்புகளை அகற்ற முதல்வர் யோகி அரசு பயன்படுத்தும் புல்டோசரும் இடம் பெற்றிருந்தது.இதன் காட்சிப்பதிவை அமைச்சராகி விட்ட ஹன்ஸ்ராஜ் தன் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இதுவும் தற்போது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி விட்டது. இதை உ.பி காங்கிரஸின் தலைவர் அஜய்ராய் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் விமர்சித்துள்ளனர்.

# தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள தொழில் நிறுவனங்களுக்கு முதல்வர் வேண்டுகோள்



சென்னை: மே-17

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) மற்றும் பிஎம்டபிள்யூ, யமஹா உள்ளிட்ட மோட்டார் வாகன நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடன் முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தினார்.தமிழகத்தில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்ட முதல்வர், அவர்களது தொழில் விரிவாக்கத் திட்டங்களுக்கு அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று உறுதியளித்தார். தமிழக முதல்வராக விஜய் கடந்த 10-ம் தேதி பதவியேற்றதை தொடர்ந்து, சென்னை தலைமைச் செயலகத்தில் நிதி, காவல், வருவாய், தொழில், வேளாண்மை உட்பட பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். அந்த வகையில், மோட்டார் வாகன நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களுடன் அவர் நேற்று ஆலோசனை மேற்கொண்டார்.இதில், தமிழகம் மற்றும் உலக அளவில் உள்ள பிரபலமான நிறுவனங்களின் முதன்மை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். தமிழகத்தில் தற்போதைய தொழில் நிறுவனங்களின் பங்களிப்புகள், அவற்றை பலப்படுத்துவதற்கான செயல்பாடுகள், மின்வாகன உற்பத்தியின் நிலை, மாநில ஏற்றுமதி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. அப்போது, தொழில் வளர்ச்சியில் மோட்டார் நிறுவனங்களின் பங்களிப்பை வெகுவாக பாராட்டிய முதல்வர் விஜய், அவர்களது தொழில் விரிவாக்கத் திட்டங்களுக்கு அரசு முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் உறுதியளித்தார். தமிழகத்தில் புதிய முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள், தொழில் நிறுவனங்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள் குறித்தும் தொழில் நிறுவன உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார். குறிப்பாக, பிஎம்டபிள்யூ நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் தாமஸ் டோஸ், யமஹா மோட்டார் இந்தியா குழுமத்தின் தலைவர் ஜிம் ஆட்டா ஆகியோர் முதல்வர் விஜய்யை தனித்தனியே சந்தித்து கலந்துரையாடினர். தமிழகத்தில் தொடர்ந்து முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அவர்களை முதல்வர் கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பு வாயிலாக, ஆட்டோமொபைல் தொடர்பான பல்வேறு புதிய முதலீடுகள் தமிழகத்துக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. முதல்வர் விஜய்யை, இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) தென் மண்டலத் தலைவர் பி.ரவிந்திரன், தமிழக தலைவர் சி.தேவராஜன், துணைத் தலைவர் ஜெ.முருகவேல், முன்னாள் தலைவர் எம்.பொன்னுசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் நேற்று சந்தித்தனர். அப்போது, தொழில் துறை வளர்ச்சி, முதலீட்டு ஊக்குவிப்பு, கொள்கை ரீதியான பங்களிப்பு ஆகியவற்றில் தமிழக அரசுடன் சிஐஐ நீண்ட காலம் கொண்டுள்ள கூட்டாண்மை குறித்தும், தொழில் தொடங்குவதை எளிதாக்குவதற்கான நடவடிக்கைகள், மாநிலத்தின் நிலையான பொருளாதாரம், தொழில் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. சிஐஐ நிர்வாகிகளின் கோரிக்கைகளை கேட்டுக் கொண்ட முதல்வர், அவற்றை பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளதாக கூறப்படுகிறது. வேளாண் துறை ஆய்வுக் கூட்டம்: மேட்டூர் உள்ளிட்ட முக்கிய அணைகளின் நீர் இருப்பு, குறுவை நெல் சாகுபடி குறித்து வேளாண்மை, நீர்வளத் துறையின் ஆய்வுக் கூட்டமும் முதல்வர் விஜய் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் தலைமைச் செயலர் எம்.சாய்குமார், வேளாண்மை துறை செயலர் வ.தட்சிணாமூர்த்தி, நீர்வளத் துறை செயலர் ஜெ. ஜெயகாந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். டெல்டா மாவட்டங்களில் சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது, சாகுபடியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள், வேளாண் பட்ஜெட் உள்ளிட்டவை தொடர்பாக இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

## டாஸ்மாக் கடைகளை மூட கால அவகாசம் வேண்டும்: கட்டிட உரிமையாளர்கள் போராட்டம்




சென்னை: மே-17

டாஸ்மாக் கடைகள் மூட உரிய கால அவகாசம் வழங்க வலியுறுத்தி, பார் உரிமையாளர்கள், பார் கட்டிட உரிமையாளர்கள் நிர்வாக இயக்குநர் அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.தமிழகத்தில் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையங்கள் அருகில் இருக்கும் 717 மதுக்கடைகளை 2 வாரங்களில் மூட முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து அந்த கடைகள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன.இதனிடையே 2 வாரங்களுக்குள் கடைகளை காலி செய்வது சாத்தியமில்லை என்றும் உரிய கால அவகாசமும், உரிமையாளர்கள், பணியாளர்கள் போதிய மாற்று ஏற்பாடுகளை வழங்க வலியுறுத்தியும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை சேர்ந்த பார் உரிமையாளர்கள், கட்டிட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமையகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தமிழகம் முழுவதும் உள்ள 2,700 பார்களையும் மூடி தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர். இதுகுறித்து தமிழ்நாடு டாஸ்மாக் பார் உரிமையாளர்கள், பார் கட்டிட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலச் சங்க மாநில தலைவர் என்.அன்பரசன் கூறியதாவது: தமிழகத்தில் பள்ளி, கோயில், பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் உள்ள 717 கடைகள் மூடப்படுவதாக தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.ஆனால் சட்ட விதிப்படிதான் தற்போதைய மதுபானக் கடைகள் இயங்கி வருகின்றன உச்ச நீதிமன்றம் 50 மீட்டர் என கூறியிருக்கும் நிலையில் 500 மீட்டர் என கூறியிருப்பதால் எந்த மதுபானக் கடைகளும் இயங்க முடியாத சூழல் உருவாகும் என்பதை தமிழக முதல்வருக்கு அதிகாரிகள் எடுத்துக் கூற வேண்டும்.தற்போது இயங்கி வரும் 717 மதுபானக் கடைகளும் சட்ட விதிமுறைக்குட்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது பொறுப்பேற்ற புதிய அரசு, ஊழியர்களின் வாழ்வாதாரத்தை பற்றி கவலைப்படாமல் இது போன்ற செயல்களை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசுக்கு எங்கள் கோரிக்கையாக மதுக் கடைகளை மூட கால அவகாசம் வழங்க வேண்டும், இல்லையென்றால் தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மதுபானக் கடைகளையும் மூட வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.இதனிடையே சங்க பிரதிநிதிகளை நிர்வாக இயக்குநர் நேற்று மாலை அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து மாலை முதல் பார்கள் மீண்டும் திறக்கப்பட்டன.

## பட்டாசு உற்பத்தியாளர்கள் கூட்டத்தில் அமைச்சர் கீர்த்தனா பேச மறுத்ததால் சலசலப்பு!



சிவகாசி: மே-17

சிவகாசியில் பட்டாசு ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் உடனான ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் கீர்த்தனா, ஒரு சில காரணங்களால் பேச முடியவில்லை என தெரிவித்ததால் தொழில் துறையினர் அதிர்ச்சி அடைந்தனர். தவெக சார்பில் போட்டியிட்டு சிவகாசி தொகுதியின் முதல் பெண் எம்.எல். ஏவான கீர்த்தனாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. பிரசாரத்தின் போதே பட்டாசு ஆலை விபத்துகளை தவிர்க்க நடவடிக்கை எடுப்பேன் என தொடர்ந்து கூறி வந்தார். தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சரான பின், விருதுநகர் வந்த அமைச்சர் கீர்த்தனா, பட்டாசு உற்பத்தியாளர்கள், தொழிலாளர்கள் உடன் ஆலோசனை ஆலோசிக்க குழு அமைத்து தீர்வு காணப்படும். சனிக்கிழமை பட்டாசு ஆலை உரிமையாளர்கள் உடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்படும் என்றார்.இந்நிலையில், இன்று பிற்பகலில் சிவகாசியில் தமிழ்நாடு பட்டாசு மாற்று கேப் வெடி உற்பத்தியாளர்கள் சங்கம் (டான்பாமா) அலுவலகத்தில் பட்டாசு ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் உடன் அமைச்சர் கீர்த்தனா ஆலோசனை நடத்தினார். பட்டாசு உற்பத்தியாளர்கள் சிலர் தங்களது கருத்துக்களை தெரிவித்த நிலையில், அமைச்சர் கீர்த்தனா எதுவும் பேசாமல் கூட்டத்தை முடித்தார். அப்போது உற்பத்தியாளர்கள் சிலர் அமைச்சரை பேசுமாறு கூறினார். அதற்கு அவர் உங்களிடம் மிக விரிவாக பேச வேண்டும் என எனக்கு ஆசை. விட்டிருந்தால் ஒரு மணி நேரம் கூட பேசியிருப்பேன். ஒரு சில காரணத்தினால், காலம் கருதி பின்பு பேசுவோம், என்றார். பட்டாசு உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் உடன் அமைச்சர் தனியாக ஆலோசனை நடத்தினார்.நேற்று முன்தினம் மதுரை விமான நிலையம், விருதுநகர், சிவகாசி என அடுத்தடுத்து 3 இடங்களில் பட்டாசு தொழில் பிரச்சினையை தீர்ப்பது குறித்து அமைச்சர் பேட்டி அளித்த நிலையில், பட்டாசு உற்பத்தியாளர்கள் உடனான ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் பேசாததால் உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.



# லண்டனில் உள்ள போஜ்சாலா சரஸ்வதி சிலையை மீட்க நடவடிக்கை : ம.பி முதல்வர் உறுதி

புதுடெல்லி, மே.17

லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள போஜ்சாலாவின் சரஸ்வதி சிலையை கொண்டுவர ஏற்பாடு செய்யப்படும் என மத்தியப்பிரதேச முதல்வர் மோஜன் யாதவ் தெரிவித்துள்ளார்.

11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தார் நகரிலுள்ள போஜ்சாலா. இந்திய தொல்லியல் ஆய்வகத்தின் கீழ் உள்ளது. இதை முஸ்லிம்கள் மவுலானா கமலூத்தீன் மசூதி எனவும், இந்துக்கள் வாக் (சரஸ்வதி) தேவி கோயில் என்றும் கூறி வந்தனர்.

இந்த பிரச்சினை பல்வேறு வழக்குகளாகி, ம.பி மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டிருந்தது. இதன் மீதான உச்ச நீதிமன்ற வழக்கில் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, ம.பி உயர் நீதிமன்றத்தின் இந்தோர் அமர்வு அனைத்து மனுக்களையும் விசாரித்தது. நேற்று வெளியான இதன் தீர்ப்பில் போஜ்சாலா ஒரு வாக் தேவி கோயிலே எனவும், முஸ்லிம்கள் நடத்தி வரும் தொழுகை அங்கு நிறுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இத்துடன், லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள வாக் தேவி சிலையை கொண்டுவந்து போஜ்சாலாவில் நிறுவப்பட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவுறுத்தி இருந்தது. இதன் மீது கருத்து கூறிய பாஜக ஆளும் ம.பி முதல்வர் மோஹன் யாதவ், வாக் தேவி சிலையை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ம.பி முதல்வர் மோஜன் யாதவ் கூறுகையில், "மன்னர் போஜ், வாக் தேவியின்



(சரஸ்வதி) திருவுருவத்தின் மூலம் இவ்விடத்தின் முக்கியத்துவத்தை நிலைநாட்டினார். இதை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

எனவே, போஜ்சாலாவின் பெருமையை மீட்டெடுக்கும் வகையில், வெளிநாட்டிலிருந்து வாக்தேவி சிலையைத் திரும்பக் கொண்டுவருவதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்படும்.

அயோத்தி கோயில் மீதான நீதிமன்றத் தீர்ப்பு, சமூக நல்லிணக்கத்திற்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் அமைந்தது. அந்த மரபைப் பின்பற்றி, போஜ் சாலா தீர்ப்பையும் ஏற்பதன் மூலம் மத்தியப் பிரதேசம் சகோதரத் துவத்தை வெளிப்படுத்தும்." எனத் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பின் மீது பாஜகவின் தோழமை அமைப்பான விஷ்வ இந்து பரிஷத்தின் சர்வதேசத் தலைவர் அலோக் குமார், 'போஜ் சாலா மீதான இந்தத் தீர்ப்பு, இந்தியாவின் கலாச்சார உணர்வு, உண்மை மற்றும் சனாதன மரபு ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்ட ஒரு முக்கிய அங்கீகாரம்.

இந்தத் தீர்ப்பானது முறையான நீதித்துறை செயல்முறைகளைப் பின்பற்றியே வெளியாகி உள்ளது. இந்த போஜ்சாலா என்பது சரஸ்வதி தேவிக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பழமையான கோவில் எனவும், சமஸ்கிருத கல்விக்கான மையமாகவும் திகழ்ந்தது என்றும் நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது.

இதற்கான அடிப்படை, அதன் மீதான வரலாற்று ஆவணங்கள், தொல்லியல் சான்றுகள் மற்றும் அங்கு தொடர்ந்து நடைபெற்று வந்த இந்து வழிபாட்டு மரபு ஆகியவை. எனவே, பொதுமக்கள் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்." எனக் கூறி உள்ளார்.

இவ்வழக்கில் இந்து தரப்பிலான முக்கிய மனுதாரரான ஆஷிஷ் கோயல், 'வரலாற்றுச் சூழல்களின் காரணமாகவே போஜ்சாலாவில் தொழுகை நடத்தும் வழக்கம் உருவானது. இந்த உண்மையை நிலைநாட்டுவதற்காகத் தானும் தனது முன்னோர்களும் நீண்ட காலமாகப் போராடி வந்தோம்." எனக் குறிப்பிட்டார். இந்த வழக்கில் ம.பி.யின் முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான திக்விஜய் சிங் கூறுகையில், "போஜ்சாலா என்பது இந்தியத் தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ள ஒரு வரலாற்றுச் சின்னம்.

அத்தகைய வரலாற்றுச் சின்னத்திற்குள் இந்து முறைப்படி பூஜையோ அல்லது இஸ்லாமிய முறைப்படி தொழுகையோ நடத்த அனுமதிக்கப்படுமா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கே உண்டு.

வாரணாசியில் உள்ள கியான்வாபி மசூதி, சம்பலில் உள்ள ஷாஹி ஜாமா மசூதி மற்றும் மதுராவில் உள்ள கிருஷ்ண ஜென்மபூமி ஷாஹி ஈத்கா ஆகிய இடங்கள் தொடர்பான வழக்குகள் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன." என அவர் குறிப்பிட்டார்.

வாக் தேவி சிலையின் விவரம்:

இந்தூர் நீதிமன்ற விசாரணையின் போது, 1875 ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசின் அரசியல் பிரதிநிதியான மேஜர் ஜெனரல் வில்லியம் கைக், அக்கோவில் வளாகத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார் என்பது தெரியவந்தது.

இந்த அகழ்வாராய்ச்சியில் அங்கு புதைக்கப்பட்டிருந்த வாக்தேவி அம்மனின் சிலை கண்டெடுக்கப்பட்டது. இச்சிலையை 1903 இல், கர்சன் பிரபு தன்னுடன் எடுத்துச் சென்று, லண்டனில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் வைத்தார்.

அன்று முதல் அந்த சிலை அங்கேயே இருந்து வருகிறது. வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, நான்கு கரங்களைக் கொண்டிருக்கும் அச்சிலையின் கிரீடமும், நேர்த்தியாக அமைக்கப்பட்ட சிகை அலங்காரமும் அதன் தெய்வீகத்தையும் மாண்பையும் பிரதிபலிக்கின்றன.

அச்சிலையின் அடிப்பாகத்தில் சமஸ்கிருத மொழியிலும் தேவநாகரி எழுத்துருவிலும் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு உள்ளது. இதில், வரருச்சி எனும் அறிஞர், வாக்தேவி அம்மன் சிலை உட்பட மூன்று சிலைகளைச் செதுக்குமாறு பணித்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது லண்டன் அருங்காட்சியகத்தினுள் உள்ள இச்சிலை ஏறத்தாழ 128.5 செ.மீ உயரமும், 58.6 செ.மீ அகலமும் கொண்டது. இதன் எடை சுமார் 250 கிலோ இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# அனைத்து மதுக்கடைகளையும் மூடினால் நாங்கள் வரவேற்கிறோம்..



பண முதலாளிகளின் ஆட்களாக செயல்பட வேண்டாம் முதலமைச்சர். நீண்ட காலமாக பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருகிறோம்..... சமீபத்தில் 717 டாஸ்மாக்குகள் தமிழ்நாட்டில் மூடப்பட்டதை தொடர்ந்து அங்கு வேலை பார்த்த ஊழியர்களின் நிலைமையை இந்த அரசு கொஞ்சம் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் மெத்தனப் போக்கில் இருந்து வருகிறது என தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர் நலச் சங்கம் சென்னை எழும்பூர் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்... இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட ஊழியர்களும் விற்பனையாளர்களும் தமிழக அரசிற்கு கோரிக்கை வைக்கும் விதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்... உழைப்போர் சங்க தலைவர் பாரதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த பொழுது தமிழக அரசு கொடுத்த வாக்குறுதிகளை தான் நாங்கள் நிறைவேற்றி தர காலம் காலமாக போராடி வருகிறோம் .. இதையெல்லாம் தெரிந்து தான் முதலமைச்சராக இருக்கக்கூடிய ஜோசப் விஜய் அவர்கள் வாக்குறுதிகளை கொடுத்து வந்தார்... இங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் 11 ஆயிரம் ரூபாயை வைத்து உங்களின் அமைச்சர்களை ஒரு மாதம் வாழ்ந்து காட்ட சொல்லுங்கள் நாங்கள் எந்த ஒரு கோரிக்கையும் வைக்கவில்லை.. மிகவும் மோசமான சூழ்நிலையில்தான் துப்புரவு பணியாளர்களும் செவிலியர்களும் ஆசிரியர்களும் டாஸ்மாக் ஊழியர்களும் இருந்து வருகின்றனர் ஆனால் ஆளும் அரசு இதனை தொடர்ந்து கண்டுகொள்ளாமல் இருந்து வருவது மிகவும் கண்டனத்துக்குரிய செயலாக இருந்து வருகிறது எனவும் குற்றச்சாட்டை முன்வைத்தார்... மேலும் மதுபான கடைகளை மூடிய அரசு பல மனமகிழ் மன்றங்களை மூடினால் நல்லது அது தமிழகத்திற்கு தேவையில்லாத ஒன்று ஆனால் அதில் அரசு எந்த ஒரு தலையிடும் செய்யாமல் இருந்து வருகிறது ஏனென்றால் அது பெரிய முதலாளிகளின் வசத்தில் இருப்பதால் அரசு அவர்களை கண்டு கொள்ள தயங்குகிறார்கள்.. அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் எண்ணத்தில் அரசு செயல்படுவதை கைவிட்டு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழி வகுக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்..

# வெள்ள பாதிப்புகளைத் தடுக்கப் போர்க்கால நடவடிக்கை : ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆட்சியர் உத்தரவு!

நெல்லை, மே.17

திருநெல்வேலி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.சுகுமார் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரவிருக்கும் தென்மேற்கு பருவமழைக் காலத்தை முன்னிட்டு, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பேரிடர் மேலாண்மை பணிகள் குறித்த துறைசார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் இரா.சுகுமார் தலைமையில், ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இக்கூட்டம் நடைபெற்றது.

மழைக்கால பாதிப்புகளைத் தடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஆட்சியர் துறை வாரியாகப் பிறப்பித்த முக்கிய உத்தரவுகள் பின்வருமாறு: மழைநீர் தேங்காமல் வழிந்தோடும் முக்கிய வழித்தடங்களைக் கண்டறிந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். நீர்நிலைகளில் உடைப்பு ஏற்படும் அபாயகரமான பகுதிகளைக் கண்டறிந்து போர்க்கால அடிப்படையில்



சரிசெய்ய வேண்டும்.

பொதுப்பணித்துறை: வெள்ளம் மற்றும் கனமழை காலங்களில் பொதுமக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் நிவாரணக் கட்டடங்களைத் தேர்வு செய்து, அவற்றின் தரம் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை: வெள்ள பாதிப்புகளைச் சமாளிக்கத் தேவையான அதிநவீன இயந்திரங்கள், உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். நீச்சல் தெரிந்த வீரர்கள், பாம்பு பிடிக்கும் நிபுணர்கள் மற்றும் தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து அவசரக்கால பயிற்சிகளை வழங்கித் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

நெடுஞ்சாலைத்துறை: சிறிய மற்றும் பெரிய பாலங்களின் அடியில் மழைநீர் தடையின்றிச் செல்வதை உறுதிசெய்யத் தூர்வார வேண்டும். இதைக் கண்காணிக்கப் பாலங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்.

குடிநீர் வடிகால் வாரியம்: நீரேற்று நிலையங்களைத் தொடர் கண்காணிப்பில் வைப்பதோடு, மின்தடை அல்லது வெள்ளக் காலங்களிலும் பொதுமக்களுக்குத் தடையின்றிப் பாதுகாப்பான குடிநீர் வழங்க மாற்றுத் திட்டங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

மின்சாரத்துறை: இடி, மின்னல் மற்றும் பெருவெள்ளக் காலங்களில் சேதமடையும் மின்கம்பங்கள் மற்றும் மின்மாற்றிகளை (Transformers) உடனடியாக மாற்றி, தடையில்லா மின்சாரம் வழங்கத் தேவையான தளவாடப் பொருட்களைக் கையிருப்பில் வைக்க வேண்டும்.

விவசாயிகள் மற்றும் கால்நடைப் பாதுகாப்பு: மழைக்காலங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் (DPC) பாதிப்படையாமல் இருக்கத் தனி கவனம் செலுத்தப்பட வேண்டும். சேரன்மகாதேவி சார் ஆட்சியர் மற்றும் திருநெல்வேலி கோட்டாட்சியர் ஆகியோர் விவசாயிகளுடன் தொடர் கூட்டங்களை நடத்தி, கொள்முதல் நிலையங்களைத் தங்களது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். மேலும், கால்நடைகளுக்குப் பருவமழைக் காலத்தில் பரவும் தொற்றுநோய்களைத் தடுக்கத் தேவையான மருந்துகளைக் கால்நடை பராமரிப்புத் துறை கையிருப்பு வைத்திருக்க வேண்டும்.

மரம் வெட்டும் இயந்திரங்கள், ஜேசிபி வாகனங்கள் மற்றும் பேரிடர் மீட்புப் பணியாளர்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், அனைத்துத்துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர் இரா.சுகுமார் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ஆயுஸ் குப்தா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், திருநெல்வேலி கோட்டாட்சியர் பிரியா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, துணை ஆட்சியர் (பயிற்சி) கேரேனாப்புக் லிதியா உட்படப் பல்வேறு துறைகளின் மாவட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் அருகே கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் K.S. Terminals நிறுவனத்தின் சர்வதேச மின்சார டெர்மினர்கள், கனெக்டர்கள் மற்றும் இணைப்பு தீர்வு காணும் உற்பத்தி ஆலையின் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் ஆட்சியர் மு. பிரதாப் தலைமை வகித்து, ஆலையை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இந்நிறுவனம் மின்சார உதிரிபாகங்கள் உற்பத்தியில் ஈடுபட உள்ளது.



சிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியத்தின் கொண்டம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட 9 ஏக்கர் மேய்க்கால் நிலத்தில், கால்நடை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசுந்தீவனம் உள்ளிட்ட பயிர்களை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் இத்திட்டம், தீவனப் பற்றாக்குறையைக் குறைத்து விவசாயிகளின் செலவைக் குறைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் நேற்று ஆய்வு செய்தார். கிராமப்புற கால்நடை வளர்ச்சிக்கு இது முக்கியப் பங்காற்றும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சினிமா செய்திகள்...

### சினிமாவில் நடிக்கப்போவதில்லை.. கண்ணீர் விட்டு அழுது பேசிய நடிகர் ரவி மோகன்



தமிழ் சினிமாவில் முன்னணி ஹீரோக்களில் ஒருவர் நடிகர் ஜெயம் ரவி. இவர் சமீபத்தில் தனது பெயரை ரவி மோகன் என மாற்றிக்கொண்டார்.

ஹீரோவாக இதுவரை வலம் வந்த ரவி மோகன் தற்போது யோகி பாபுவை வைத்து 'An Ordinary Man' என்கிற திரைப்படத்தை இயக்கி வருகிறார். கடந்த ஆண்டு ரவி மோகன் ஆர்த்தி விவாகரத்து செய்தி பெரும் அதிர்ச்சியை ரசிகர்களுக்கு கொடுத்தது.

இவர்களுடைய விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில், ரவி மோகன் அதிர்ச்சியளிக்கும் முடிவு ஒன்றை அறிவித்துள்ளார்.

அதாவது, விவாகரத்து கிடைக்கும் வரை இனி சினிமாவில் நடிக்கப்போவதில்லை என கூறியுள்ளார். மேலும், இதுவரை நடித்த படங்களையும் வெளியிடப்போவதில்லை என தெரிவித்துள்ளார். ரவி மோகனின் இந்த முடிவு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

மேலும், குழந்தைகளை பார்க்க என்ன அனுமதித்தில்லை. பள்ளிக்கு கூட பாடிகாட் உடன் அனுப்புகிறார்கள். தினமும் என் குழந்தைகளுடன் செஸ் விளையாடி அவர்களிடம் தோற்றுப்போவேன்; எனக்கு பாசமில்லையா?. எனக்கு நடந்தது பிளாக் மெயில் திருமணம், கையை அறுத்துக்கொண்டு மிரட்டி என்னை திருமணம் செய்தார், என்னை அடிமையாக வைத்திருந்தார்கள்." என கண்ணீர் விட்டு அழுது பேசியுள்ளார்.

# எல்எஸ்ஜி அணிக்கு எதிராக படுதோல்வி: பிளேஆஃப் சுற்றுக்கு சிஎஸ்கே முன்னேறுமா?

சென்னை, மே.17

நடப்பு ஐபிஎல் சீசனின் 59வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணியை 7 விக்கெட்டுகளில் வீழ்த்தியது லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் (எல்எஸ்ஜி). இந்த சூழலில் பிளே ஆஃப் சுற்றுக்கு சிஎஸ்கே முன்னேறுமா? அதற்கான வாய்ப்பு குறித்து விரிவாக பார்ப்போம்.

நடப்பு சீசனில் இருந்து மும்பை இந்தியன்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் ஏற்கெனவே வெளியேறி விட்டன. இந்த சூழலில், பிளே ஆஃப் சுற்றுக்கு இதுவரை எந்த அணியும் முன்னேறவில்லை. புள்ளிப் பட்டியலை பொறுத்த வரையில் முதல் இரண்டு இடங்களில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் உள்ளன. அதற்கடுத்த இடங்களில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத், பஞ்



சாப் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ், சிஎஸ்கே, டெல்லி கேப்பிட்டல்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் உள்ளன.

வரும் 24ம் தேதி உடன் லீக் சுற்று ஆட்டங்கள் நிறைவு பெறுகின்றன. 26ம் தேதி முதல் பிளே ஆஃப் சுற்று தொடங்குகிறது. இந்த சூழலில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பிளே ஆஃப் சுற்றுக்கு முன்னேறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பிளே ஆஃப் சுற்றுக்கு சிஎஸ்கே அணி முன்னேறும் வாய்ப்பு எப்படி? நடப்பு சீசனில் 12 ஆட்டங்களில் விளையாடி 6ல் வெற்றி பெற்றுள்ளது சிஎஸ்கே. இதன் மூலம் மொத்தம் 12 புள்ளிகளை பெற்றுள்ளது. தற்போது புள்ளிப்பட்டியலில் ஆறாம் இடத்தில் உள்ளது. லீக் சுற்றில் இன்னும் இரண்டு ஆட்டங்களில் மட்டுமே சிஎஸ்கே விளையாட வேண்டி உள்ளது. மே 18ல் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் மே 21ல் குஜராத் டைட்டன்ஸ் உடன் சிஎஸ்கே விளையாடுகிறது.

எல்லிஸ், தோனி, கலீல் அகமது, ஆயுஷ் மாத்ரே, ஜேமி ஓவர்டன் என சிஎஸ்கே அணியின் முக்கிய வீரர்கள் காயமடைந்துள்ளனர். இதில் தோனியை தவிர மற்ற அனைவரும் இந்த சீசனில் இருந்து விலகி உள்ளனர். தோனியின் மேட்ச் ஃபிட்னஸ் காரணமாக அவர் இன்னும் ஒரு ஆட்டத்தில் கூட இந்த சீசனில் விளையாடவில்லை. வீரர்களின் காயங்கள் சிஎஸ்கே அணிக்கு பாதகமாக அமைந்தது.

இந்த சூழலில் வெள்ளிக்கிழமை அன்று எல்எஸ்ஜி உடனான தோல்வி காரணமாக பிளேஆஃப் சுற்றுக்கு சிஎஸ்கே முன்னேறுவதில் மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

சிஎஸ்கே அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற 2 ஆட்டங்களிலும் வெற்றி பெற வேண்டும். அதோடு மற்ற அணிகள் ஆடும் ஆட்டங்களில் முடிவு சிஎஸ்கே அணிக்கு சாதகமாக அமைய வேண்டும். ஏனெனில், 12 ஆட்டங்களில் விளையாடி 13 புள்ளிகளுடன் பஞ்சாப் கிங்ஸ் அணி 4ம் இடத்தில் உள்ளது. அந்த அணி விளையாடவுள்ள இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்றால் போதும். அதுவே ஒரு ஆட்டத்தில் தோல்வி அடைந்தால் கூட மற்ற அணிகளுக்கான வாய்ப்புகள் திறக்கும். ஆனால், அந்த அணி தொடர் தோல்வியை தழுவி வருகிறது. 5ம் இடத்தில் உள்ள ராஜஸ்தான் அணி 11 ஆட்டங்களில் 12 புள்ளிகளை பெற்றுளளது. அந்த அணி இன்னும் 3 ஆட்டங்களில் விளையாடுகிறது. இதில் ராஜஸ்தான் அணி ஒரு ஆட்டத்தில் தோல்வியை தழுவினால் சிஎஸ்கே அணிக்கான பிளே ஆஃப் வாய்ப்பு உயிர்ப்போடு இருக்கும்.

இருப்பினும் இதற்கு சிஎஸ்கே இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற்று, நெட் ரன் ரேட்டையும் பிளே ஆஃப் போட்டியில் மற்ற அணிகளை காட்டிலும் சிறந்ததாக கூட்ட வேண்டும். ஆர்சிபி மற்றும் குஜராத் அணிகள் தலா 16 புள்ளிகளுடன் உள்ளன. சன்ரைசர்ஸ் அணி 14 புள்ளிகளை பெற்றுள்ளது.

# திற்பரப்பு அருவி பகுதியில் சுற்றுலா வளர்ச்சி திட்ட பணிகள் : கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு!



குமரி, மே.17

திருவட்டார் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அவர் தெரிவிக்கையில்: கன்னியாகுமரி மாவட்டம் மிக முக்கியமான சுற்றுலாதளம் ஆகும். இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை புரிக்கின்றனர். பயணிகளைக் கவரும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பறை வசதி, குளியறை வசதி, நிழற்குடைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் சுற்றுலாத்துறை வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


அதன் ஒரு பகுதியாக சிற்றார் அணை மிமி பகுதியில் ரூ.3.40 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் அணை பகுதி மேம்பாட்டு சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. படகு சவாரி அமைவிடம், படகுதளம், உணவுக்கூடம், குடில் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப்பணிகளை விரைந்து முடித்து சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து திற்பரப்பு அருவி பகுதியில் அருவி பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.4.30 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் திற்பரப்பு அருவிக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கு மிடம், பெண்கள் உடைமாற்றும் அறை, நடைபாதை, கழிப்பறைகள், பூங்கா மேம்பாட்டு பணிகள் உள்ளிட்டவைகளை பார்வையிட்டு பணிகளின் தன்மை குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் சுற்றுலா பயணிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவது குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகளை தரமானதாக விரைந்து முடித்திடவும் செயல் அலுவலர்கள், ஒப்பந்ததரார்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து அருவிக்கரை ஊராட்சிக்குட்பட்ட மாத்தூர் தொட்டிப்பாலம் பகுதியில் சூழலியல் சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப்பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இங்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான பாதுகாப்புகள் வழங்கிடவும், குளிக்கும் இடத்தில் படித்துறை அமைக்கவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் செயற்பொறியாளர், நீர்வளத்துறை, மாவட்ட சுற்றுலா அலுவலர், திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி பொறியாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் உள்ளிட்டவர்கள் இணைந்து கண்காணித்து திட்டப்பணிகளை விரைந்து முடித்து சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

ஆய்வில் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேஷ்குமார் (வ.ஊ), சசி (கி.ஊ), திற்பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர், உதவி பொறியாளர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



**2026 சட்டப் பேரவை தேர்தலில் நிலக்கோட்டை தொகுதியில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆர். அய்யனார் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்றார். சென்னையில் இருந்து திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டப்பேரவை அலுவலகத்திற்கு வருகை புரிந்த ஆர். அய்யனார் எம். எல். ஏ., நிர்வாகிகளை சந்தித்து, தொகுதியில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார்.**



**விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுகா சிறுவாடி அரசு நெல் கொள்முதல் நிலையத்தில், 50க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு விற்பனைக்காகக் கொண்டு வந்த சுமார் 10,000 மூட்டை நெல், காலை பெய்த பலத்த மழையால் அடித்துச் செல்லப்பட்டு வீணானது. இதனால் பெரும் நஷ்டத்தைச் சந்தித்துள்ள விவசாயிகள், தங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



**திருவள்ளூரில் இருந்து சென்னை, பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் ரயில் நிலையம், செவ்வாபேட்டை, வேப்பம்பட்டு, திருநின்றவூர், ஆவடி, தண்ணீர்குளம், பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் இயக்கப்படுகின்றன. காக்களூர் பைபாஸ் சாலை மற்றும் ஜெஎன் சாலை சந்திக்கும் இடத்தில் சிறிய ரவுண்டானா அமைத்தால் வாகனங்கள் முறையாக செல்லவும், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் வசதியாக இருக்கும் என வாகன ஓட்டிகள் எதிர்பார்ப்பாக உள்ளது.**

## காவல் நிலையத்தை முற்றுகையிட்ட மக்கள்



திருவள்ளூர், மே.17

திருவொற்றியூர் தாங்கல் பகுதியில் 15 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த தனியார் சீட்டு கம்பெனி உரிமையாளர் திடீரென தனது செல்போனை அணைத்துவிட்டு தலைமறைவானார். இதனால் அதிர்ச்சியடைந்த வியாபாரிகள் திருவொற்றியூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போலீசார் அவர்களை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்க அறிவுறுத்தினர்.

## ஆவடியில் 100கிலோ கஞ்சா பறிமுதல்

திருவள்ளூர், மே.17

சென்னையை அடுத்த ஆவடியின் அயப்பாக்கத்தில் உள்ள ஒரு வீட்டில் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில், வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 100 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட போலீசார், ஆந்திராவில் இருந்து கஞ்சாவை கடத்தி வந்து பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் 3 பேரை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## திருத்தணி: விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கோட்டாட்சியர் பங்கேற்பு




திருவள்ளூர், மே.17

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வருவாய் கோட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கோட்டாட்சியர் கனிமொழி தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் திருத்தணி, ஆர்கே பேட்டை, பள்ளிப்பட்டு வட்டாட்சியர்கள், வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். விவசாயிகள் தங்கள் குறைகளை மனுக்களாக அளித்தனர். இனி வரும் கூட்டங்களில் அனைத்து உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குளத்தை சீரமைக்க கோரிக்கை



திருவள்ளூர், மே.17

பெரியபாளையம் பழைய ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே அமைந்துள்ள 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த பெரியகுளம், தற்போது புதர்கள் மண்டி, கழிவுநீர் கலக்கும் இடமாக மாறியுள்ளது. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு குடிநீருக்காக பயன்படுத்தப்பட்ட இக்குளத்தில், இறைச்சிக் கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படுவதால் அதன் நிலை மோசமடைந்துள்ளது. குளத்தை தூர்வாரி, கரைகளை பலப்படுத்தி, பூங்கா அமைக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தனியார் வேலைவாய்ப்பு முகாம் : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தகவல்



திருவள்ளூர், மே.17

கல்வித் தகுதியும் விருப்பமும் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப். தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் வேலைவாய்ப்பு பிரிவின் சார்நிலை அலுவலகங்களான அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் பிரதிமாதம் 2வது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமையில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் வரும் 22.05.2026 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 3.00 வரை சிறு அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இதில் 25க்கும் மேற்பட்ட தனியார்துறைநிறுவனங்கள் கலந்து கொண்டு 250க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களுக்கு தங்களுக்கு தேவையான வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் கலந்துக்கொள்ள உள்ள வேலையளிப்போர் மற்றும் வேலைநாடுநர்கள் தனியார்துறை இணைய தளத்தில் (www.tnprivatejobs.tn.gov.in) பதிவு செய்து கொள்ளலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, பட்டப் படிப்பு, ஐடிஐ மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் கலந்துகொண்டு CNC, Quality Inspector, Site Engineers, Business Developers, Trainee, Machine Operator, Junior Technicians நிர்வாகப் பணி போன்ற பல்வேறு வகையான பணி வாய்ப்பினைப் பெற்று பயனடையுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில் பணி நியமனம் பெறுபவர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு இரத்து செய்யப்பட மாட்டாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்காணும் கல்வித் தகுதியும் விருப்பமும் உள்ள வேலைதேடும் இளைஞர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: ஓட்டுநர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தல்!



குமரி, மே.17

வாகன ஓட்டுநர்களால் பள்ளி மாணவ மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா அறிவுறுத்தினார்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் செயல்பாட்டில் உள்ள வாகனங்களை நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி வளாகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் பணியினை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர்.ஸ்டாலின், முன்னிலையில் நேற்று (16.05.2026) பார்வையிட்டார்.

பின்னர் அவர் தெரிவிக்கையில் தமிழ்நாடு முழுவதும் பள்ளி வாகனங்கள் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இயங்குகிறதா? என ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், மார்த்தாண்டம் என 2 வட்டார போக்குவரத்து அலுவலங்கள் உள்ளன. இதில் நாகர்கோவில் வட்டார போக்குவரத்திற்கு கீழ் உள்ள தனியார் பள்ளி வாகனங்களின் தரம் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் நாகர்கோவில் கல்வி மாவட்டத்திற்கு உட்பட்ட 86 பள்ளிகளில் 315 வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. பள்ளி வாகனங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அவற்றில் படிக்கட்டுகள் தரையிலிருந்து முதல் படியின் உயரம் 250 மி.மீ மிகாமலும், வழுக்காதவாறு (Non-slip treads) அமைக்கப்பட்டுள்ளதா? ஓட்டுநருக்கும் மாணவர்களுக்கும் இடையே தனித்தடுப்பு வசதி உள்ளதா? இருக்கைகள் மாணவர்களுக்கு வசதியாக உள்ளதா?, தரைப்பகுதி பலவீனமடையாமல் தட்டையான பலகைகளால் சீராக அமைக்கப்பட்டுள்ளதா, அவசர கால கதவு மற்றும் எளிதாகத் திறக்கும் வசதிகள் சரியாகச் செயல்படுகின்றனவா?,

முதலுதவி பெட்டி மற்றும் தீயணைப்பு கருவிகள் ஐ.எஸ்.ஐ முத்திரையுடன் பொருத்தப்பட்டுள்ளனவா? ஜன்னல்களில் மூன்று இரும்பு கம்பிகள் உள்ளனாவா?, வேகம் கட்டுப்படுத்தும் கருவி உள்ளதா, பள்ளி பேருந்திற்கான பிரத்யேக மஞ்சள் நிறம் மற்றும் பள்ளி விவரங்கள் ஆகியவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா?, வாகனங்களின் முன்பக்கம் மற்றும் பின்பக்கங்களில் சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்பட்டுள்ளதா உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்கள் பள்ளி வாகனங்களில் முறையாக கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு உள்ளது.

ஆய்வின் போது, பெரும்பாலான வாகனங்கள் தகுதித்தரத்துடன் இருந்த நிலையில், ஒரு சில வாகனங்களில் சிறிய அளவிலான குறைபாடுகள் கண்டறியப்பட்டன. அந்த வாகனங்களின் உரிமையாளர்களிடம் குறைபாடுகளை உடனடியாகச் சரிசெய்து, 15 நாட்களுக்குள் மீண்டும் ஆய்வுக்குட்படுத்திய பிறகே இயக்க வேண்டும். அரசு விதிகளின்படி அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்த பள்ளி வாகனங்களுக்கு, நடப்பாண்டில் இயக்குவதற்கான சான்றளிப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. பள்ளி மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வதில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளப்பட மாட்டாது.

மேலும் பள்ளி வாகனங்களில் குழந்தைகளை பத்திரமாக ஏற்றி செல்ல வேண்டும். வாகன ஓட்டுநர்கள் வாகனம் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்த கூடாது. சாலை விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். ஓட்டுநர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக செயல்பட வேண்டும். சீட் பெல்ட் போட்டு வாகனம் ஓட்ட வேண்டும் என ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. வாகன ஓட்டுநர்களால் பள்ளி மாணவ மாணவியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து தீயணைப்பு வீரர்களால், வாகனங்களில் தீ அபாயம் ஏற்பட்டால் அவற்றை எவ்வாறு கையாள வேண்டுமென்றும், தீயணைப்பு கருவியை பயன்படுத்துவது எப்படி என்பது குறித்தும் ஓட்டுநர்களுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆய்வில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, நாகர்கோவில் உதவி காவல் கண்காணிப்பாளர் லலித்குமார், நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் (பொ) சுரேஷ்பாபு, மாவட்ட கல்வி அலுவலர் (மெட்ரிக்) அஜிதா, மோட்டார் வாகன ஆய்வாளர் சுரேஷ்குமார், துறை அலுவலர்கள், தீயணைப்பு வீரர்கள், வாகன ஓட்டுநர்கள், நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# பிஎம்ஸ்ரீ திட்டத்தை தவெக அரசு நிராகரிக்க முதல்வர் விஜய்க்கு இந்திய கம்யூ. வலியுறுத்தல்



சென்னை, மே.17

'பிஎம்ஸ்ரீ திட்டத்தை தமிழக வெற்றிக் கழக அரசு உறுதியுடன் நிராகரிக்க வேண்டும்' என்று முதல்வர் விஜய்க்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "பாஜகவின் ஒன்றிய அரசு 'இந்துத்துவா' கருத்தியலையும், சமஸ்கிருதம், இந்தி மொழித் திணிப்பையும் உள்ளடக்கமாகக் கொண்ட பிஎம்ஸ்ரீ திட்டத்தை தமிழக அரசு ஆரம்ப நிலையில் இருந்தே எதிர்த்துவருகிறது.

இந்தத் திட்டத்தை ஏற்க வேண்டும் என நிர்பந்தித்து வரும் ஒன்றிய அரசு, தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்துக்கு நிதியை வழங்க மறுத்துவிட்டது. மாநில அரசின் சொந்த நிதிப் பொறுப்பில் கல்வித் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், ஒன்றிய அரசு கடந்த 7ம் தேதி பிஎம்ஸ்ரீ திட்டத்தை ஏற்று கையெழுத்து போட வேண்டும் என தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தமிழக வெற்றிக் கழக அரசும் பிஎம்ஸ்ரீ திட்டத்தை உறுதியுடன் நிராகரிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம், தமிழ்நாடு முதல்வரை கேட்டுக் கொள்கிறது" என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.



திருச்செந்தூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக 7 முறை வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர் ராதா கிருஷ்ணன் அவர்களை மரியாதை நிமித்தமாக AK. கமால்தீன் தலைவர் ஆத்தூர் பேரூராட்சி மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் தூத்துக்குடி தெற்கு அவர்கள் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தார் இந்நிகழ்வில் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள். கேசவன். பாலசிங். சிவா. முத்து. அசோக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

### ஆயக்குடி அருகே

# கோயிலின் கதவை உடைத்து பணம் பொருட்கள் திருடிய வழக்கில் வாலிபர் கைது!

திண்டுக்கல், மே. 17–

திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்த ஆயக்குடி அருகே எருமநாயக்கன்பட்டி அருள்மிகு மருதகாளியம்மன் கோயிலின் கதவை மர்ம நபர் உடைத்து உள்ளே நுழைந்து பணம், பொருட்கள் திருடியது தொடர்பாக ஆயக்குடி காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஷ் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்து விசாரணை மேற்கொண்டு மேற்படி



சம்பவத்தில் ஈடுபட்ட சாமிநாதபுரம், G.V.G–நகரை சேர்ந்த சிவசங்கர்(28) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொடைக்கானலில் மின் பராமரிப்பு பணி செய்யும் போது மின்வாரிய ஊழியர் மீது மின்சாரம் தாக்கியதால் பரபரப்பு!



திண்டுக்கல், மே. 17–

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல், செவன் ரோடு சந்திப்பில் மின்வாரிய ஊழியர் விஜய்(39) மற்றும் 2 மின்வாரிய ஊழியர்கள் பராமரிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது விஜய் மின் கம்பத்தில் ஏறி மின் கம்பியை சரி செய்து கொண்டிருந்தபோது திடீரென மின்சாரம் தாக்கியது இதில் மின் கம்பத்திலேயே விஜய் மயக்கம் அடைந்தார். மின்வாரிய ஊழியர்கள் மின்கம்பத்தில் ஏறி முதலுதவி சிகிச்சை அளிக்க முன் வந்த போது மின் கம்பியில் மின்சாரம் வந்தது மின்வாரிய ஊழியர்களின் நீண்ட நேரம் போராட்டத்திற்கு பிறகு விஜயின் நெஞ்சில் அமுக்கி முதல் உதவி செய்து பொதுமக்கள் உதவியுடன் மின் கம்பத்திலிருந்து கீழே இறக்கினர். தொடர்ந்து விஜய் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்.

### திண்டுக்கல் அருகே சரக்கு வாகனம் மோதி

# இருசக்கர வாகனத்தில் சென்ற பெண் பலி - மனதை பதை பதைக்க வைக்கும் சிசிடிவி காட்சி!

திண்டுக்கல், மே. 17–

திண்டுக்கல், வெள்ளோடு–ஐ சேர்ந்த ஜஸ்டின், சோபியா சகாயமேரி, ஜெர்ரி ஆகிய 3 பேரும் இருசக்கர வாகனத்தில் அண்ணாமலையார் மில் மேடு அருகே வந்து கொண்டிருந்த போது பின்னால் அதிவேகமாக வந்த சரக்கு வாகனம் இருசக்கர வாகனம் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டு சோபியா சகாயமேரி கீழே விழுந்து படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். ஜஸ்டின் மற்றும் ஜெர்ரி படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதுகுறித்த பரபரப்பு சிசிடிவி காட்சி தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

# PSNA பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திண்டுக்கல் 38-வது பட்டமளிப்பு விழா!




திண்டுக்கல், மே. 17–

PSNA பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இளங்கலை பட்டதாரிகளுக்கான 38வது பட்டமளிப்பு விழா 16–05–2026 அன்று நேர்த்தியாக நடைபெற்றது. இவ்விழாவில் தகவல் தொழில்நுட்பம்(IT), செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்(AI&DS) துறைகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவ மாணவிகள் தங்களது பட்டங்களை பெற்றுக்கொண்டனர். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக சி–டாக், பெங்களூரு நிர்வாக இயக்குநர் முனைவர். எஸ். டி. சுதர்சன் அவர்கள் பங்கேற்று 250 மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவானது கல்லூரியின் தலைவர் கே. தனலட்சுமி அம்மாள் அவர்கள் மற்றும் ஆர். எஸ். கே. ரகுராம் மற்றும் டிரஸ்டி சூர்யா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர். டி. வாசுதேவன் அவர்கள் வாழ்த்துரையாற்றினார். விழாவின் சிறப்பு விருந்தினராக சி–டாக், பெங்களூரு நிர்வாக இயக்குநர் முனைவர் எஸ். டி. சுதர்சன் அவர்கள் கலந்து கொண்டு பட்டதாரிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துரையாற்றினார். வளாக வேலைவாய்ப்பின் மூலம் கல்லூரியின் பட்டதாரிகள் பல முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளனர். இதில் மாணவ மாணவிகள் CTS, TCS, Hexaware, Lavendel, HCL, L&T உள்ளிட்ட பல நிறுவனங்களில் வேலை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பவானிசாகர் அணையில் வெளியே தெரியும் டனாய்க்கன் கோட்டை மாதவராய பெருமாள் கோவில்!



ஈரோடு, மே. 17–

தமிழகத்தில் தஞ்சை டெல்டா பாசனத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய பாசனப்பரப்பும், தென் இந்தியாவின் மிகப்பெரிய மண்அணை என்ற பெருமையையும் பெற்றுள்ளது, பவானிசாகர் அணை. அணையின் முழு நீர்தேக்கப்பரப்பு 30 சதுர மைல்கள். அணையின் மொத்த உயரம் 105 அடி. அணையில், 32.8 டி.எம்சி வரை நீரை தேக்கி வைக்கலாம். ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணை 1948ம் ஆண்டு பவானி ஆறும் மாயாறும் ஒன்று சேறுமிடத்தில், கட்டுமானப்பணி தொடங்கப்பட்டது. அப்போது, நீர்த்தேக்கம் அமையவுள்ள பகுதியில், 600 ஆண்டு பழமை வாய்ந்த, டணாய்க்கன் கோட்டையில் உள்ள மாதவராய பெருமாள் கோவில், சோமேஸ்வரர் மற்றும் மங்களாம்பிகை கோவில்கள், அப்பகுதியில் வசித்து வந்த மக்களின், வழிபாட்டுத் தலமாக திகழ்ந்து வந்தது. அணை கட்டுமானப்பணி துவங்கியபோது, நீர்த்தேக்க பகுதியில் வசித்த கிராம மக்கள், பவானிசாகர், ராஜன் நகர், புதுக்குய்யனூர், பண்ணாரி சுற்றுவட்டாரத்தில் குடியேறினர். அணைக்குள் இருந்த பழமை வாய்ந்த சிலைகள், எடுத்து வரப்பட்டு பவானிசாகர், கீழ்பவானி வாய்க்கால் கரையோரம், கோவில் கட்டபப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன. 1955ம் ஆண்டு கட்டுமானப்பணி முடிந்தபின், அணைக்குள் முழுவதும் கற்களால் கட்டப்பட்ட, கோவில் மற்றும் மண்டபங்கள் நீரில் மூழ்கி சிதிலமடைந்தன. அணையின் நீர்மட்டம் 60 அடிக்கும் கீழ் குறையும்போது, நீர்த்தேக்கத்தின் தெற்கு பகுதியில் உள்ள, டணாய்க்கன் கோட்டை, மாதவராய பெருமாள் கோவில், சோமேஸ்வரர் மற்றும் மங்களாம்பிகை கோவில்கள், வெளியே தெரியவரும். கடந்த 2024 ஆம் ஆண்டு நீர்மட்டம் குறைந்து கோவில்கள் வெளியே தெரிந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நீர்மட்டம் குறையாத நிலையில் கோவில்கள் வெளியே தெரியவில்லை. தற்போது அணையின் நீர்மட்டம் 59 அடியாக உள்ளதால், மாதவராய பெருமாள் கோவில் முழுவதுமாக காட்சியளிக்கிறது.

# கும்மிடிப்பூண்டி மருத்துவமனையில் நோயாளிகளை பாதுகாக்கவும் மருத்துவமனையை மேம்படுத்த நடவடிக்கை!



கும்மிடிப்பூண்டி, மே. 17–

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் விஜயகுமார் தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அரசு பொது மருத்துவமனையில் தமிழக வெற்றி கழக கும்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் விஜயகுமார் ஆய்வு செய்தார் அப்போது மருத்துவர்கள் போதுமான அளவில் உள்ளனரா மருத்துவமனைக்கு தேவையான அடிப்படை வசதிகள் நோயாளிகளுக்கு சிகிச்சை பெறுவதற்கான அனைத்து வசதிகளும் உள்ளனவா என்பது குறித்தும் கேட்டறிந்தார் கொசு தொல்லையால் நோயாளிகள் அவதி அடைந்து வருவதை தடுக்கும் வகையில் அனைத்து ஜன்னல்களிலும் கொசுவலை பொருத்த நடவடிக்கை எடுப்பதாகவும் மருத்துவர்களிடம் நோயாளிகளுக்கு தேவையான வசதிகளை பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். ஆய்வின் போது திடீர் மின்தடை ஏற்பட்டதால் புதிதாக கட்டப்பட்ட மருத்துவமனையில் ஜெனரேட்டர் வசதி மின் இணைப்பை ஏற்படுத்திடவும் பாதுகாப்பற்ற சூழலில் மருத்துவமனை உள்ளதால் சுற்றுச்சுவர் அமைக்கவும் மருத்துவமனையை மேம்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார் முன்னதாக ஆரம்பாக்கம் பகுதியில் கஞ்சா நடமாட்டம் அதிகமாக உள்ளதாகவும் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்டமன்ற உறுப்பினர் தன்னை சந்திக்க வந்த கட்சி நிர்வாகிகளிடம் அறிவுறுத்தினார்.

இதில் தமிழக வெற்றி கழக முக்கிய நிர்வாகிகள் கிருபாகரன் அரி அன்பு உதயகு மார் கும்மிடிப்பூண்டி நகரச் செயலாளர் விஜய் பழனி நகர இணைச்செயலாளர் காட்வின் பூண்டி சம்பத் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




தருமபுரி மாவட்ட புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள மைதானத்தில் தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் பாலக்கோடு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் சார்பில் நடைபெற்ற தனியார் பள்ளி பேருந்துகள் ஆய்வினை மாவட்ட ஆட்சியர் திரு.ரெ.சதீஸ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.எஸ்.மகேஸ்வரன், இ.கா.ப., தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.சி.க.ஜெயதேவ்ராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.லோகநாதன், தருமபுரி வருவாய் கோட்டாட்சியர்(பொ) திரு.பண்டரிநாதன், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர் திரு. ஆ.க.அசோக்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.அ.க.தரணீதர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



### கோவில்பட்டி புதுக்கராம் பகுதியில் வாறுகால் பகுதிகளை அடைத்த ரயில்வே நிர்வாகம்

# கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்கும் பரிதாபம் - நகராட்சி அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக பொதுமக்கள் அவதி என குற்றச்சாட்டு!

கோவில்பட்டி, மே. 17–

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட புதுக்கிராமம் திருமங்கைநகர் பகுதியில் ரெயில்வே தன்டவாளம் அருகே சென்ற வாறுகால் பகுதிகளை திடீரென அடைத்ததால் திருமங்கைநகர், புதுக்கிராமத்தில் உள்ள கழிவுநீர் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா. கருணாநிதி மற்றும் அப்பகுதி மக்கள் அடைக்கப்பட்ட வாறுகால் பகுதிகளை திறந்து விட வலியுறுத்தி ரயில்வே அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர் ஏற்கனவே தங்கள் இடத்தின் வழியாக வாறுகால் பகுதியை அடைக்கப் போவதாக நகராட்சி நிர்வாகத்திற்கு ரயில்வே துறை கடிதம் அனுப்பி நிலையில் நகராட்சி நிர்வாகத்தின் அலட்சியம் காரணமாக இன்றைக்கு வாறுகால் அடைக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் சம்பவ இடத்தில் இருக்கும் நிலையில் தகவல் கொடுக்கப்பட்டும் நகராட்சி ஆணையர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ரயில்வே நிர்வாகம் சார்பில் கடிதம் கொடுக்கப்பட்ட போதே அதற்கான நடவடிக்கை எடுக்காமல் நகராட்சி அதிகாரிகள் அலட்சியம் காட்டியதால் இன்றைக்கு பொதுமக்கள் அவதிக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

# கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் வெற்றி பெற்றால் மொட்டை போடுவதாக வேண்டிக் கொண்ட கயத்தாறு திமுக தொண்டர் வேண்டுதலை நிறைவேற்றினார்!

கோவில்பட்டி, மே. 17–

கடந்த சட்டமன்ற தேர்தலில் கோவில்பட்டி தொகுதி திமுக தொண்டர்களின் நீண்டகால ஏக்கத்திற்கு பிறகு, திமுகவுக்கு ஒதுக்கப்பட்டு திமுக வேட்பாளராக கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி போட்டியிட்டார். இந்நிலையில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் திமுக வேட்பாளர் வெற்றி பெற்றால் மொட்டை போடுவதாக கயத்தாறு பேரூராட்சிக்கு உட்பட்ட 12வது வார்டு அரசன்குளத்தை சேர்ந்த தொண்டன் கருப்பசாமி (64) என்பவர் வேண்டுதல் வைத்திருந்தார். கலைஞரின் தீவிர விசுவாசியான இவர் கடந்த 50 வருடத்திற்கும் மேலாக திமுக தொண்டராக இருந்து வருகிறார். இவரின் தீவிர கட்சிப் பணி காரணமாக தொண்டன் கருப்பசாமி என அடைமொழியுடன் அழைக்கப்பட்டும் இவர் வார்டு செயலாளர், நகர இளைஞரணி துணை



அமைப்பாளர், ஒன்றிய தொண்டரணி துணை அமைப்பாளர் போன்ற பொறுப்புகளில் இருந்த இவர் தற்போது திமுக ஒன்றிய பிரதிநிதியாகவும் பதவி வகித்து வருகிறார். இவரின் வேண்டுதல் படி கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் கருணாநிதி வெற்றிபெற்றார். எனவே தனது வேண்டுதல் படி நேற்று தொண்டன் கருப்பசாமி மொட்டை போட்டு தனது வேண்டுதலை நிறைவேற்றினார்.



ஈரோடு மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எல்லப்பாளையம் ஆர் சிவக்குமார் நேற்று தமிழக வெற்றி கழகம் கிழக்கு தொகுதி எம்எல்ஏவும் மாவட்ட செயலாளருமான விஜய் பாலாஜி முன்னிலையில் எல்லப்பாளையம் பகுதியைச் சேர்ந்த தங்களுடைய ஆதரவுடன் கட்சியில் இணைத்துக் கொண்டார் இவர் அதிமுகவில் முன்னாள் மாவட்ட செயலாளர் யூனியன் சேர்மன் என பல பதவிகள் வகித்து வந்த நிலையில் 2010ல் திமுகவில் இணைந்தால் 2021 இல் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு இவர் ஈரோடு மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக நியமிக்கப்பட்டார் தற்சமயம் தமிழக வெற்றி கழகத்தில் தனது எல்லப்பாளையம் ஊரைச் சேர்ந்த ஆதரவுகளுடன் இணைத்துக் கொண்டார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor:S.V.KANI RAJA. CALL: 044-22772060,9443699066